# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106.

தொலைபேசி எண்கள். 044-2363 5010/2363 5011 நிகரி எண்கள். 044-2363 8282/2363 8283

மின் அஞ்சல் tnsec@tn.nic.in இணைய தளம் www.tnsec.tn.nic.in


---

நாள் 26.01.2016

## குடியரசு தின விழா செய்தி வெளியீடு

குடியரசு தின விழாவினை முன்னிட்டு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தில் மாநில தேர்தல் ஆணையர் திரு. பெ. சீத்தாராமன், இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தேசியக் கொடியேற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.

சென்னை, அரும்பாக்கம், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையம் அருகிலுள்ள தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய வளாகத்தில் குடியரசு தின திருநாளை முன்னிட்டு இன்று (26.01.2016) தேசியக் கொடி ஏற்றும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திரு. பெ. சீத்தாராமன், இ.ஆ.ப.,(ஓ) அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி காவல் துறை அணிவகுப்பினை ஏற்றுக் கொண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களுக்கு இனிப்பு வழங்கி தனது மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் ஆணையத்தில் பணியாற்றும் அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் பொது மக்கள் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

26.01.16

மக்கள் தொடர்பு அலுவலர்.